வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06 | 06.06.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 157 | பக்கங்கள் : 12




# உரித்தை நிரூபித்தாலே நகைகள் இல்லையேல் பொதுநிதியத்துக்கு!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு

நகைகளில் ஒருதொகை வடக்கு அபிவிருத்திக்கு



கொழும்பு, ஜூன் 06

**போர் காலத்தில் வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளுக்கான ஆவணங்களை உரியவர்கள் உறுதிப்படுத்தினால் அவர்களுக்கு நகைகள் வழங்கப்படும். ஆவணங்களை உறுதிப்படுத்தாவிடின், அந்த நகைகளில் ஒருதொகை வடக்கு பொது அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும். இதற்கு பொது நிதியம் ஒன்றும் நிறுவப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் எம். பி., "வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளை உரியவர்களுக்கு வழங்க வேண்டும்", என்று கோரியிருந்தார்.

அவருக்கு பதிலளித்த பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்தவை வருமாறு,

போரின்போது வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய சட்ட நடவடிக்கைகள் ஊடாக பொலிஸ் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த தங்க நகைகள் போர் காலத்தில் வடக்கிலிருந்து கைப்பற்றப்பட்டன.

இந்தத் தங்க நகைகள் இரசாயன பகுப்பாய்வுக்கு 11

# போதைப்பொருள் பாவனை மாணவரிடையே அதிகரிப்பு

ஆளுநருடனான சந்திப்பில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 06

"போதைப்பொருள் பாவித்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் அழைத்துவரப்படும் மாணவர்களில் 10இல் 7 பேர் உயிர்கொல்லி போதை மாத்திரைகளை பயன்படுத்தியுள்ளமை தெரிய வந்துள்ளது", என்று யாழ். போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி செ. பிரணவன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீதிமன்றத்தால் 15 -18 வயதுக்கு இடைப்பட்ட சிறார்கள் 36 பேர் உயிர்கொல்லி 11

# போதை அடிமையாளரை மீட்க வடக்கில் மறுவாழ்வு மையம்!

இந்த மாதத்துக்குள் ஆரம்பிக்க பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 06

உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நிலையம் ஒன்றை வடக்கில் இந்த மாத இறுதிக்குள் உடனடியாக ஏதாவது ஓர் இடத்தில் தற்காலிகமாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் அதிகாரிகளை பணித்துள்ளார். 11

மனித புதைகுழி அகழ்வில்

# சர்வதேச நடைமுறைகளை பின்பற்றுவது அவசியமானது

சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்து

புதுடில்லி, ஜூன் 06

செம்மணி - அரியாலை மனித புதை குழி அகழ்வில் சர்வதேச நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று கேட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பணிமனை, வெளிப்படைதன்மையையும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில், அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

செம்மணியின் இரண்டாவது (அரியாலை) மனித புதைகுழியை தோண்டும் நடவடிக்கைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளதால் பாதிக்கப்பட்டவர்கள் 11

# மனித புதைகுழிக்கு நீதிவேண்டி செம்மணியில் நேற்று போராட்டம்

பு.கஜிந்தன்



யாழ்ப்பாணம், ஜூன் 06

செம்மணி (அரியாலை சித்துப்பாத்தி) மனித புதைகுழி அகழ்வு சர்வதேச கண்காணிப்பில் - சர்வதேச நியமங்களை பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், மனித புதைகுழிக்கு நீதி கோரியும் கவனவீர்ப்பு போராட்டம் 11



# உணர்வெழுச்சியுடன் சிவகுமாரனுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜூன் 06

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் முதலில் உயிர்நீத்த பொன். சிவகுமாரனின் 51ஆவது நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.

உரும்பராயில் அமைந்துள்ள பொன். சிவகுமாரனின் சிலை அருகே இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, பொன். சிவகுமாரனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் 11

தமிழ் அரசு - ஈ. பி. டி. பி. நேற்று சந்திப்பு:

# "ஆதரவளிக்குமாறு கோரினோம்" - சீ.வீ.கே. "மக்கள் நலன்சார்ந்து பரிசீலனை" - டக்ளஸ்



யாழ்ப்பாணம், ஜூன் 06

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானமும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ. பி. டி. பி.) செயலாளர் நாயகம் கே. என். டக்ளஸ் தேவானந்தாவும் சந்தித்து பேசினர்.

நேற்று வியாழக்கிழமை மாலை இந்த சந்திப்பு ஈ. பி. டி. பியின் தலைமை பணிமனையில் நடைபெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சீ. வீ. கே. சிவஞானம், 11

# அரியாலை மனித புதைகுழியில் 18 மனித எச்சங்கள் அடையாளம்!

மனித புதைகுழி அறிவிப்பு வழக்கில் இன்று கட்டளை

யாழ்ப்பாணம், ஜூன் 06

அரியாலை (செம்மணியின் தொடர் நிலப்பகுதி) மனித புதைகுழியில் நேற்று வியாழக்கிழமை வரை 18 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் 11

# குருந்தூர்மலையில் கைதான விவசாயிகள் விடுதலை!

முல்லைத்தீவு, ஜூன் 06

குருந்தூர்மலையில் கைதுசெய்யப்பட்ட விவசாயிகள் இருவரும் நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர்.

குருந்தூர்மலை பகுதியில் உள்ள தங்கள் பூர்வீக வேளாண்மை நிலங்களில் கடந்த மே 10ஆம் திகதி பயிர் செய்கைக்காக நிலத்தை 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மனித புதைகுழி வழக்கு; நேற்று மீண்டும் விசாரணைக்கு!

மன்னார், ஜூன் 06

மன்னார் சதொச மனித புதைகுழி தொடர்பில் சில தீர்மானங்கள் நேற்று நீதிமன்றில் எடுக்கப்பட்டுள்ளன என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி. எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழி தொடர்பான வழக்கு நேற்றைய தினம் மன்னார் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.


இது தொடர்பில் சட்டத்தரணி ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

வழக்குக்கு ஏற்கனவே அழைக்கப்பட்ட சட்டத்தரணிகள் பிரசன்னமான நிலையில், மன்னார் நீதிவான் மற்றும் அழைக்கப்பட்ட நிறுவனத்தினரும் மனித புதைகுழி பகுதியை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதைத் தொடர்ந்து சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மனித புதைகுழி பகுதியை சுத்தப்படுத்தவும் நிரம்பியுள்ள நீரை வெளியேற்றவும் நகர சபை இணங்கியுள்ளது. இதன் அடிப்படையில் அந்தப் பகுதியை துப்புரவு செய்வது. அத்துடன், புதைகுழியை பகுதியளவில் மூடுவது. அந்தப் பகுதியில் தோண்டப்பட்ட மண் சதொச நிறுவனத்திடம் உள்ளதா? இது இப்போது எங்கே உள்ளது போன்ற விடயங்களை பொலிஸார் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

இதன்படி, எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்படும் - என்றார்.(ஐ)



## யாழ். பல்கலைக்கழகத்தில் சிவகுமாரனுக்கு அஞ்சலி!


யாழ்ப்பாணம், ஜூன் 06

தமிழினத்தின் விடுதலை போராட்டத்துக்காக முதலில் உயிர்நீத்த தியாகி பொன். சிவகுமாரனின் 51ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழகத்திலும் நேற்று நினைவேந்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த இந்த நிகழ்வில் பொன். சிவகுமாரனின் திருவுருவ படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## சிவசிதம்பரத்தின் நினைவுதினம் நெல்லியடியில் அனுஷ்டிக்கப்பட்டது



வடமராட்சி, ஜூன் 06

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உப சபாநாயகருமான மு. சிவசிதம்பரத்தின் 23ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் நெல்லியடி பேருந்து நிலையம் முன்பாக உள்ள அவரின் சிலையடியில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, அன்னாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம்,

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கரவெட்டி கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள சிலைக்கும் நேற்றைய தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-02)

# அதிகாரிகளின் ஆதரவுடனேயே சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை

வடமராட்சி, ஜூன் 06

வடமராட்சி கிழக்கில் அதிகாரிகளின் ஆதரவுடன் சட்டவிரோத மீன்பிடி இடம்பெறுகிறது என்று யாழ். மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் இ. முரளிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமூக மாற்றத்துக்கான ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வடமராட்சி கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெறும் சட்டவிரோத தொழில்களால் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான சிறிய மீன்கள் பிடிபட்டு அழிக்கப்படுகின்றன. இது தொடர்பில் வடமராட்சி கிழக்கு சமாசம் உட்பட கடற்றொழில் அமைச்சருக்கும் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.


சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் கைது செய்யப்படுவர்களை முல்லைத்தீவு அதிகாரிகள் விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை மேற்கொள்கிறார்கள். படகுகளை தடுத்து வைக்கிறார்கள். ஆனால், வடமராட்சி கிழக்கு பகுதியில் உடனடியாகவே விடுவிக்கிறார்கள். இவ்வாறான செயல்பாடுகளால் எமது கடற்பகுதியில் நாளாந்தம் சட்டவிரோத மீன்பிடி முறை அதிகரித்து வருகிறது

முல்லைத்தீவில் இருக்கின்ற சமாச தலைவர், நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் நேர்மையானவர்கள். ஆனால், வடமராட்சி கிழக்கு சமாசம் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள்தான் இங்கு சட்டவிரோத தொழில் நடைபெறுவதற்கு காரணமாக இருக்கிறார்கள். இவர்கள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

அம்பாந்தோட்டையிலிருந்து மீனவர்கள் இங்கு வந்து மீன் பிடிக்கின்றனர். வடமராட்சி கிழக்கு சமாசம், சங்கங்களின் ஆதரவுடனேயே அவர்கள் இங்கே வருகிறார்கள். எமது கடல் பகுதியை விரைவில் அழித்தொழிக்க பெரும் சதி நடைபெறுகின்றது. இதற்கு அதிகாரிகளும் காரணமாக இருக்கிறார்கள்.

கடற்றொழில் அமைச்சர் இது தொடர்பில் கவனம் எடுத்து வடமராட்சி கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத தொழிலை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ-02)

## தமிழ் அரசை வழக்கிலிருந்து விடுவிக்க கோரி போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 063

இலங்கை தமிழ் அரசு கட்சியை வழக்குகளிலிருந்து விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவு தூபி முன்பாக நேற்று போராட்டம் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சண்முகராஜா ஜீவராஜா இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தார். சுமார் 6 மணிநேரம் நீடித்த இந்த உண்ணாவிரத போராட்டத்தில் பொது மக்களில் சிலரும் பங்கேற்றனர். (ஐ)

## தமிழ் போட்டி

வடமராட்சி, ஜூன் 06

புலோலி வில்லிபாதி முருகன் ஆலய தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தமிழ் போட்டி நடத்தப்படவுள்ளது.

தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், கட்டுரையாக்கம் என்பவற்றை கொண்டதாக இந்தப் போட்டி அமையும். வெற்றி பெறுவோருக்கு முதலாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாயும் இரண்டாம் பரிசாக 7 ஆயிரம் ரூபாயும் மூன்றாம் பரிசாக 5 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படவுள்ளன. அத்துடன், தலா 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஐந்து ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

077 188 0896 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-02)

## 9 அடி நீளமான முதலை மீட்பு



வவுனியா, ஜூன் 06

வவுனியா கொக்குவெளியில் வீடொன்றின் வளவிலிருந்து 9 அடி நீளமான முதலை வனஜீவ ராசிகள் திணைக்களத்தால் மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் தோட்டப் பகுதியில் முதலையை கண்ட வீட்டின் உரிமையாளர் அதனை துரத்தியுள்ளார். அப்போது அது கைவிடப்பட்ட கிணற்றில் விழுந்தது.

இதையடுத்து, வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்தே முதலை மீட்கப்பட்டது. (ஐ)

## மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி, ஜூன் 06

பண்டாரி அம்மன் கோவில் என அழைக்கப்படும் பருத்தித்துறை தம்பசிட்டி மகாமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.23 மணி முதல் 8.30 மணி வரையான சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. நாளை சனிக்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்தமுடியும்.

இந்த ஆலயத்தின் பிரதம குரு வாமதேவ சிவாச்சாரியார் சபா. பாஸ்கர குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். ஆசியுரைகளை பொலிகண்டி கந்தவனம் திருக்கோவில் பிரதமகுரு குருமணி சிவப்பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக்குருக்கள், நாயன்மார்கட்டு து. மகாசிவ குருக்கள், கரணவாய் மூத்த விநாயகர் திருக்கோவில் பிரதம குரு கெ. கைலாசநாத குருக்கள் ஆகியோர் வழங்குவர். (ஐ-02)

# பிளாஸ்ரிக் பாவனை ஒழிப்பு; யாழில் நேற்று நடைபவனி!

யாழ்ப்பாணம், ஜூன் 06

நாட்டில் பொலித்தின் பைகள், பிளாஸ்ரிக் பாவனையை முற்றாக இல்லாதொழிக்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக நடைபவனி ஒன்று யாழ். நகரதில் முன்னெடுக்கப்பட்டது.

சேவ் லைவ் அமைப்பின் ஒழுங்கமைப்பில் யாழ். பொது நூலகம் அருகே முனியப்பர் கோயில் முன்பாக ஆரம்பமான நடை பவனி யாழ். நகரை அடைந்து பின்னர் யாழ். மாநகர சபை புதிய கட்டடம் முன்பாக நிறைவடைந்தது.

இதன்போது, யாழ். மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் வீதி நாடகம் அரங்கேறியது. இந்த நிகழ்வுகளில் மாணவர்கள், அரச திணைக்களத்தினர், பொது அமைப்புகள் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.06.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உள்ளூரில் ஆட்சியமைத்தல்

"மழை ஓய்ந்தாலும் தூவானம் விடவில்லை" என்பதுபோல் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்தாலும் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்கும் பிரச்னை முடிவடையவில்லை. இதுவரை அரசியலில் தீண்டாமையை போற்றிய அனைவரும் மற்றவர்களை நோக்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருக்கின்றனர். இதுவரையில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளின் பிரதான எதிரிக் கட்சியாகவும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்களாகவும் சித்திரிக்கப்பட்ட ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பணிமனையைத் தேடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் இதேபோன்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் தமிழ்த் தேசிய பேரவையும் இணைந்த உருவாக்கிய புதிய கூட்டணியும் ஆளாகியிருக்கின்றன.

யாழ்ப்பாண மாநகர சபையின் ஆட்சியை கைப்பற்ற வேண்டுமாயின் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியிருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தல் முறையால் மிகவும் குறைவான ஆசனங்களை வைத்திருக்கும் கட்சியும் அரசியல் முக்கியத்துவம் உடையதாக மாறியிருக்கிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபையை எவ்வாறாயினும் தங்களின் வசமாக்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சி முயற்சிக்கிறது. தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதாயின், இலங்கை தமிழ் அரசு கட்சி இலகுவாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சியை கைப்பற்ற முடியும். ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களின்போது இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ்த் தேசியப் பேரவை, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய அனைத்துக் கட்சிகளுமே தேசிய மக்கள் சக்தியை குறிவைத்தே தங்களின் பிரசாரங்களை முனனெடுத்திருந்தன. அவர்கள் தமிழ் மக்களின் பிரதான எதிரியாக சித்திரிக்கப்பட்டனர்.

இந்தப் பின்புலத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைக்க முடியாது. ஒருவேளை அதற்கு எவரேனும் முயற்சித்தால் அதனை இரகசியமாகவும் செய்ய முடியாது. ஏனெனில், தேசிய மக்கள் சக்தி இரகசியமான உடன்பாடுகளுக்கு தயாராக இல்லை. மேலும், தமிழ்த் தேசிய அரசியலில் பிரதான எதிரியாக சித்திரிக்கப்பட்ட ஒரு தென்னிலங்கை கட்சியோடு தமிழ்த் தேசிய தரப்புகள் உடன்பாடுகளை செய்தால் அடுத்துவரும் மாகாண சபைகள் தேர்தலில் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்.

இப்போதுள்ள நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபையை கைப்பற்ற வேண்டுமாயின், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியோடு உடன்பாட்டுக்கு செல்வதைத் தவிர தமிழ்த் தேசியத் தரப்புகளுக்கு வேறு வழியில்லை. ஈழ மக்கள் ஜனநாயக கட்சி எந்தத் தரப்பை ஆதரிக்கிறதோ அவர்களே யாழ்ப்பாண மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவர்.

தேர்தல் அரசியல் என்பது, நாற்காலி கருத்துருவாக்கங்கள் போன்று இலகுவானது அல்ல - மிகவும் சிக்கலானது. எவரையும் நிரந்தரமான எதிரிகளாக பேணிப் பாதுகாக்க முடியாது. ஈழத் தமிழர் அரசியல் பரப்பில் அவ்வாறானதொரு நிலைமை இப்போது தெளிவாகவே தெரிகிறது. இதுதான் உண்மையான அரசியல். கடந்த காலத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அவர்களுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட சிவில் சமூக குழுக்களும் கருத்துருவாக்கிகள் என்போரும் அரசியல் யதார்த்தங்களை புரிந்து கொள்ள முடியாதவர்களாவும் - புரிந்துகொள்ள முயற்சிக்காதவர்களாகவுமே இருந்தனர். ஆனால், தற்போது அவர்கள் மத்தியில் நல்ல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தேர்தல் அரசியல் மூலம் விடயங்களை கையாளும்போது எப்போதும் நெகிழ்வுத்தன்மையான தீர்மானங்களுக்கு தயாராக இருக்க வேண்டும் என்பதை காலம் நிருபித்திருக்கிறது. இந்தப் படிப்பினையின் அடிப்படையில் எதிர்காலத்தில் அரசியலில் இணங்கிச் செல்ல வேண்டிவரும் என்னும் பட்டறிவுடன் மற்றவர்களை எதிரியாக்காத கட்சி அரசியலை முன்னெடுப்பதற்கு அவைரும் தங்களை புடம்போட்டுக் கொள்வது அவசியம்.

# போக்குவரத்து துறையில் அடிப்படை பிரச்னைகளுக்கு துரித தீர்வு காண்க

## எதிர்க்கட்சி பிரதம கொறடா வலியுறுத்து

கொழும்பு, ஜுன் 06

நாட்டில் 1,400 வரையிலான புகையிரத கடவைகள் காணப்படுகின்றன. இவற்றில் 400இற்கும் அதிகமானவை பாதுகாப்பற்ற கடவைகளாக உள்ளன. போக்குவரத்து துறையில் உள்ள அடிப்படை பிரச்னைகளுக்கு துரிதமாக தீர்வு காண வேண்டும் - இவ்வாறு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய போக்குவரத்து ஆணைக் குழு (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், அரச மற்றும் தனியார் பேருந்து சேவை, பயணிகள் முச்சக்கரவண்டி சேவை மற்றும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை ஆகியவற்றை கண்காணிக்க சட்டமூலத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

பேருந்து மற்றும் புகையிரதங்கள் பொது பயணிகளுக்கு பாதுகாப்பற்ற வகையில்தான் பயணிக்கிறார்கள். இதற்கு குறுகிய கால அடிப்படையில் தீர்வு காணமுடியாது என்பதை அறிவோம். நீண்டகால அடிப்படையில் தீர்வு காண்பதற்கான திட்டங்களை அரசாங்கம் செயல்படுத்த வேண்டும். சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

நடுத்தர குடும்பம் ஒன்று தமது மாத வருமானத்தில் 25 சதவீதத்தை பொது போக்குவரத்து சேவைக்காக செலவழிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இதேபோல் சொந்த வாகனம் வைப்பிருப்பவர்கள் தமது வருமானத்தில் பெரும் பங்கை எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்புக்காக செலவழிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

பொது போக்குவரத்து சேவையில் புகையிரத சேவை பிரதானமானதாக உள்ளது. புகையிரத சேவையை பயன்படுத்தும் பயணிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகிறார்கள். புகையிரதங்கள் தாமதமடைதல், சேவைகள் இரத்தாகுதல் வழமையாகிவிட்டது. இதனால் பொதுபயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள் கிறார்கள் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# சஷீந்திர ராஜபக்ஷவிடம் 7 மணிநேரம் விசாரணை

கொழும்பு, ஜுன் 06

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவிடம் ஏழரை மணி நேரம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

சீனாவிலிருந்து தரமற்ற உரங்களை இறக்குமதி செய்ததால் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சஷீந்திர ராஜபக்ஷ, இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் நேற்று காலை முற்பட்டிருந்தார்.

சுமார் ஏழரை மணிநேரம் வாக்குமூலம் அளித்த பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறினார். (ஐ)

# பிறந்த சிசுவை விற்க முயன்ற தாய்க்கு 7 வருடங்கள் கடூழியம்!

கொழும்பு, ஜுன் 06

பிறந்து இரண்டு நாள்களேயான சிசுவை விற்க முயன்ற தாய்க்கு 7 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

தனக்கு பிறந்த குழந்தையை 75 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்ய முயன்ற 46 வயது பெண்ணான 3 பிள்ளைகளின் தாயாருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் அதனை செலுத்தாதுவிடின், மேலும் 6 மாதங்கள் சிறைத் தண்டனையும் விதித்து நீதிபதி நவரத்ன மாரசிங்க தீர்ப்பளித்தார்.

# உலக சுற்றாடல் தினம் பாராளுமன்றில் மரநடுகை


கொழும்பு, ஜுன் 06

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் மர நடுகை நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, குழுக்களின் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, எதிர்க் கட்சிகளின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக, பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பதவியணித் தலைமை அதிகாரியும் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேவர்தன, படைக்கல சேவிதர் குஷான் ஜயரத்ன, உணவு வழங்கல் வீட்டுப் பராமரிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் ராஜ் எதிரிசிங்க உள்ளிட்ட திணைக்களங்களின் பிரதானிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜூன் - 06 வெள்ளிக்கிழமை**
விசுவாவசு வருடம் - வைகாசி 23
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : ஏகாதசி




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமை கிடைக்கும். நன்மை கிடைக்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சனைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் அனுசரித்துப் போங்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருச்சிகம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

# தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழில் பசுமை காடாக்கல் செயல்திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 06

தேசிய சுற்றாடல் வாரம் மற்றும் தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் பயன்தரும் மரங்களை நாட்டி பசுமை காடாக்கல் செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் செயல்திட்டமானது யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இதில் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிர்திப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜாவும் கலந்துகொண்டார்.



முதலில் பதில் அரசாங்க அதிபர் மரக்கன்று ஒன்றை நாட்டினார். இதன் பின்னர் யாழ். மாவட்ட செயலகத்தின் பதவி நிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மரக் கன்றுகளை நாட்டினர்.

இந்த நிகழ்வுக்கு 450 மரக் கன்றுகளை கிறீன் லேயர் நிறுவனத்தினர் இலவசமாக வழங்கினர். (எ-05)

# துப்பாக்கிச் சூடு நடத்தியோர் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

**றிஷாத் பதியுதீன் எம். பி. வலியுறுத்தல்**

மன்னார், ஜூன் 06

திருகோணமலை, குச்சவெளியில் மீனவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் மீது உடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழிலுக்காக கடலுக்குச் சென்ற அப்பாவி மீனவ சமூகத்தினர் மீது கடற்படை தரப்பினர் அத்துமீறி நடப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது தொடர்பில் உரிய முறையில் விசாரித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தான்தோன்றித்தனமான முறையில் அப்பாவிகள் மீது துப்பாகிச்சூடு மேற்கொள்ளும் செயல்பாட்டை நிறுத்த வேண்டும்.

இது போன்ற செயல்பாடுகள் நாட்டின் பாதுகாப்புத் துறை மேல் மக்கள் நம்பிக்கையிழந்து வருகின்றமைக்கு பெரும் உதாரணமாக அமைந்து விடும்.

எனவே, மீனவ சமூகத்தை அச்சமூட்டும் இந்தச் செயல்பாடுகளை நிறுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# முல்லைத்தீவு கரையோர பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் பணி முன்னெடுப்பு

முல்லைத்தீவு, ஜூன் 06

சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் கரையோரப் பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் பணி நேற்று முன்தினம் காலை முன்னெடுக்கப்பட்டது. கரையோரப் பிரதேசங்களான செல்வபுரம் மற்றும் கோவில் குடியிருப்பு பகுதிகளில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் தலைமையில் இந்தச் செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தை அழகுபடுத்தல், தூய்மைப்படுத்தும் நிகழ்வாக மாவட்ட செயலகம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் இந்த செயல்பாடு நடைபெற்றது.



குறித்த பணியில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபையின் செயலாளர், கரையோரம் பேணல் பாதுகாப்புத் திணைக்களத்தினர், ஏனைய உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பொலிஸார், கடற்றொழில் சங்கத்தினர், சமாசத்தினர், சம்மேளனத்தை சேர்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ)

## துன்னாலையில் 15 லீற்றர் கசிப்பு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 06

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் 15 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளதுடன் அதனை எடுத்துச் சென்றவர் தப்பிச் சென்றுள்ளார்.



நேற்று முன்தினம் புதன்கிழமை துன்னாலைப் பகுதியில் காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினர் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, துன்னாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கசிப்பை எடுத்துச் சென்ற நபரை மறிக்க முற்பட்ட போது கசிப்பு கலனை வீசிவிட்டு அவர் தப்பிச் சென்றுள்ளார்.

மீட்கப்பட்ட கலனிலிருந்து 15 லீற்றர் கசிப்பையும் காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினர் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு உப்பை விற்க யாரும் முயற்சிக்கவேண்டாம்!

## அமைச்சர் வசந்த சமரசிங்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 06

**இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட உப்பை அதிக விலைக்கு விற்க முயற்சித்தால், இந்த வாரத்திற்குள் உப்புக்கான அதிகபட்ச சில்லறை விலையை அறிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க எச்சரித்துள்ளார்.**



ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட அமைச்சர் சமரசிங்க, உள்ளூர் சந்தையில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாகவே அரசாங்கம் உப்பு இறக்குமதி செய்ய அனுமதித்ததாகவும், இறக்குமதியாளர்கள் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு அதிக விலைக்கு உப்பு விற்பனை செய்வதற்கு அனுமதி இல்லை என்றும் கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உப்பு ரூ.77 ஆகவும், அரசாங்கம் விதிக்கும் 40 வீத வரியுடன் சேர்த்து விலை நிர்ணயம் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

"ஒரு கிலோவுக்கு ரூ. 80 விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம். பின்னர், மொத்த வியாபாரிகள் ரூ. 10, 20 அல்லது 30 லாபத்தை வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த வரம்பைத் தாண்டிச் செல்லக்கூடாது. இருப்பினும், இறக்குமதியாளர்கள் இந்தப் பற்றாக்குறையைப் பயன்படுத்தி ஒரு மோசடியை உருவாக்க முயற்சித்தால், அத்தகைய செயல்களில் ஈடுபடவேண்டாம் என்று நான் அவர்களை எச்சரிக்க விரும்புகிறேன். இது தொடர்ந்தால் அதிகபட்ச சில்லறை விலையை விதிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்போம்," என்று அவர் கூறினார்.

இறக்குமதியாளர்கள் ரூ.80 மதிப்புள்ள ஒரு கிலோ இறக்குமதி செய்யப்பட்ட உப்பை 250 ரூபாவுக்கு விற்க முயற்சிக்க வேண்டாம் என்றும் அமைச்சர் சமரசிங்க மேலும் எச்சரித்தார்.

"இறக்குமதி செய்யப்பட்ட உப்பு ரூ. 110 அல்லது ரூ. 120 இற்கு விற்கப்பட்டாலும் பரவாயில்லை. அந்த இலாபம் போதுமானது. உப்பு இறக்குமதி தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மட்டுமே அனுமதிக்கப்பட்டது, இறக்குமதியாளர்கள் லாபம் ஈட்டுவதற்காக அல்ல. இறக்குமதியாளர்களுக்கு இதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். அத்தகைய லாபம் பெற நாங்கள் அனுமதிக்க மாட்டோம்," என்று அவர் மேலும் கூறினார். (அ)

# இலங்கையில் இயங்கி வரும் 4 இஸ்ரேலிய மத மையங்கள்!

கொழும்பு, ஜூன் 06

இலங்கையில் நான்கு இஸ்ரேலிய மத மையங்கள் இயங்கி வருவதாகவும், அவற்றில் இரண்டு பதிவு செய்யப்படவில்லை என்றும் மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொத்துவில் மற்றும் திம்பிரிகஸ்யாயவில் அமைந்துள்ள இஸ்ரேலிய மத மையங்கள் மத இடங்களாக பதிவு செய்யப்படவில்லை என்றும், வெலியோகம மற்றும் எல்லவில் உள்ள இஸ்ரேலிய மத மையங்கள் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு டிசெம்பரில் பிரதமரிடமிருந்து கேள்விகள் எழுப்பப்பட்ட பிறகும், தெஹிவளை மற்றும் கொழும்பு 7இல் இஸ்ரேலிய மத மையங்களாக செயல்படும் அங்கீகரிக்கப்படாத கட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்ட எஸ்.ரி.எவ் மற்றும் பொலிஸ் பாதுகாப்பை அரசாங்கம் அகற்றவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கூறினார்.

இருப்பினும், கொழும்பு-7, சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் உள்ள மையத்திற்கு வழங்கப்பட்ட எஸ்.ரி.எவ் பாதுகாப்பு தற்போது அகற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹினிதும சுனில் செனவி கூறினார். (அ)

# 408 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 06

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் புதன்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 408 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 117 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 160 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 127 பேரும், போதை மாத்திரைகளுடன் 04 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 161 கிராம் 161 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 248 கிராம் 119 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 08 கிலோ 70 கிராம் 183 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 4479 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த அரசின் விசேட திட்டம் அறிமுகம்!

கொழும்பு, ஜூன் 06

சுற்றுலா ஹோட்டல்களைச் சுற்றியுள்ள கடற்கரைப் பகுதிகளின் தூய்மையைப் பேணும் நோக்கில் ஹோட்டல் கடற்கரைப் பராமரிப்பாளர்களை நியமிக்கும் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஹபராதுவ பிரதேச செயலக வளாகத்தில் நேற்று முன் தினம் முற்பகல் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்கும், குறித்த சுற்றுலா விடுதிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதன்படி, சுற்றுலா ஹோட்டல்களைச் சார்ந்துள்ள கடற்கரைப் பகுதியைப் பாதுகாக்க பிரதேச நபர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அந்த நபருக்கான கொடுப்பனவும் வழங்கப்படும்.

" அழகான கடற்கரை - கவர்ச்சிகரமான பயண எல்லை" என்ற பெயரில் "கிளீன் சிறிலங்கா" வேலைத்திட்டம், அரச, தனியார் மற்றும் பொதுமக்கள் ஆகிய துறைகளை உள்ளடக்கிய வகையில் செயல்படுத்தப்படும்.

நாடளாவிய ரீதியில் உள்ள கடற்கரைகளின் தூய்மையைப் பேணுவது சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருப்பதுடன், கடல்சார் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ப்லூ பிளாக் சான்றிதழை இலங்கை பெறுவதற்கும் இத்திட்டம் பங்களிக்கும். (அ)

# கழுத்து நெரித்து பெண் கொலை!



கொழும்பு, ஜூன் 06

கம்பஹாவில் மஹாபாகே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெரகஹபொக்குன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கழுத்து நெரித்து பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக மஹபாகே பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று முன் தினம் புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

மஹாபாகே, கெரகஹ பொக் குன பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய பெண்ணொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தையடுத்து வீட்டிலிருந்த தங்க நகைகளும் காணா மல்போயுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலையாளி வீட்டிலிருந்த தங்க நகைகளை திருடிச் சென் றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் ராகமை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையாளி தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கண்டறியப்படவில்லை என பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# போதை மாத்திரைகளுடன் இருவர் சீதுவையில் கைது!

கொழும்பு, ஜூன் 06

கம்பஹாவில் சீதுவை பிரதேசத்தில் போதை மாத்திரைகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிரிபத்கொடை மற்றும் கந்தானை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 42 மற்றும் 51 வயதுடையவர்கள் ஆவர். சந்தேக நபர்களிடமிருந்து 4450 போதை மாத்திரைகளும், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கார் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சீதுவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீனி தொடர்பான பேஸ்புக் பதிவு தலைமை அதிகாரி பதவி விலகல்

கொழும்பு, ஜூன் 06

சீனித் தொழில் தொடர்பாக பேஸ்புக்கில் வெளியிடப்பட்ட பதிவை அடுத்து பெல்வத்தை சீனித் தொழிற்சாலைகளின் தலைமை செயற்பாட்டு அதி காரி பதவியில் இருந்து நுவான் தர்மரத்ன விலகியுள்ளார்.

சீனித் தொழில் தொடர்பான சமூக ஊடகப் பதிவு தொடர்பாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி விடுத்த கோரிக் கையைத் தொடர்ந்து அவர் பதவி விலகியுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஹந்துன்நெத்தி, அவ ரது உத்தியோகபூர்வ பணிக்கு ஒத்துப்போகவில்லை என்ப தால் தர்மரத்னவை பதவி விலகு மாறு கேட்டுக் கொண்டதாக உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய அரசாங்கம் பதவியேற்ற சிறிது நேரத்திலேயே, 2024 ஒக்ரோபரில் அமைச்சர் விஜித ஹேரத்தால் தர்மரத்ன இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். (அ)

# உதய கம்மன்பிலவுக்கு எதிரான வெளிநாட்டு பயண தடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 06

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான வெளிநாட்டு பயணத் தடை நீக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய வர்த்தகரான பிரயன் ஷெடிக் என்பவருக்கு சொந்தமான 20 மில்லியன் ரூபா பெறுமதியான நிறுவன பங்குகளில் மோசடி செய்ததாக உதய கம்மன்பில மீது குற்றம் சுமத்தி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

நம்பிக்கை மீறலில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தி தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து உதய கம்மன்பில குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இதன் அடிப்படையில் வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குமாறு நீதிமன்றில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த தடை நீக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் உதய கம்மன்பில குற்றமற்றவர் என தீர்ப்பளித்திருந்தது.

எனினும் தமக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடை இதுவரை நீக்கப்படவில்லை என கம்மன் பில சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் அறிவித்திருந்தார்.

இந்த கோரிக்கையை பரிசீலனை செய்த நீதிமன்றம் பயணத் தடையை நீக்குமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அதிகாரபூர்வ அறிவிப்பு விடுத்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கும் நாங்கள் ஜம்பர் அணிவிப்போம்!

## நீதி அமைச்சருக்கு சாமர எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 06

**நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு என்றாவது ஒருநாள் சிறைச்சாலையில் ஜம்பர் அணிவிக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு- நீதி அமைச்சர் , நீதிமன்றத்தை மதிக்க வேண்டும். கருத்துகளை வெளியிடும்போது பொறுப்புடன் செயற்பட வேண்டும். தேசிய மக்கள் சக்தியால்தான் மகிந்தானந்த சிறைக்குள் சென்றார் என அவர் கூறியுள்ளார். இது தொடர்பான காணொளி தொலைக் காட்சியில் வெளியானது. நீதிபதிகள் மூவர்தான் தீர்ப்பை வழங்கி இருந்தனர். அவர்களை அவமதிக்கும் வகையில் நீதி அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்துள்ள அவருக்கு நிச்சயம் ஜம்பர் அணிவிக்கப்படும். நீதிமன்றத்துக்கு எதிராக கதைத்ததால் எஸ்.பி. திஸாநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க ஆகியோருக்கு ஜம்பர் அணிவிக்கப்பட்டது. எனவே, உங்களுக்கும் (நீதி அமைச்சர்) நிச்சயம் ஜம்பர் அணிவிப்போம். என்றாவது ஒருநாள் அதனை செய்வோம்- என்றார். (அ)

# பன்றி வளர்ப்பு கைத்தொழிலை மீளக் கட்டியெழுப்ப செயலணி

கொழும்பு, ஜூன் 06

பன்றி வளர்ப்பு கைத்தொழிலை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்வதற்கான செயலணியொன்றை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாய, கால்நடை வள அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஒருவரின் இணைத் தலைமையில் இந்த செயலணி நியமிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு நாட்டின் பல பகுதிகளில் பரவிய ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் காரணமாக 1,594 பன்றிப் பண்ணைகளில் 61,695 பன்றிகள் உயிரிழந்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

எனினும், நோய்ப் பரவலின் தற்போதைய நிலை மற்றும் நோய் பரவல் தொடர்பான, சரியான விஞ்ஞான ரீதியான தகவல்கள் இன்மை காரணமாகப் பன்றிப் பண்ணைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே, குறித்த பணிகளை மேற்கொள்வதற்காக இந்த செயலணியை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. (அ)

# 66,000இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் தேர்தல் செலவு அறிக்கை சமர்ப்பிப்பு!

கொழும்பு, ஜூன் 06

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட 75,500 வேட்பாளர்களில், 66,000க்கும் மேற்பட்டோர் இதுவரையில் தங்களது தேர்தல் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவுச் சட்டத்தின் பிரிவு 7 இன் படி, குறித்த தேர்தல் செலவு அறிக்கைகளைப் பொதுமக்களுக்காகக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட தேர்தல் செலவு அறிக்கைகளின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அலுவலகத்திலும் பொதுமக்களுக்காகக் காட்சிப்படுத்தப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கைகளைக் குறித்த தினத்திலிருந்து ஒவ்வொரு வார நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வேலைவாய்ப்புகளுக்காக 148 பேர் இஸ்ரேல் பயணம்

கொழும்பு, ஜூன் 06

இஸ்ரேலின் நிர்மாணத் துறையின் கீழ் செயல்படும் வேலைவாய்ப்புகளுக்காக 148 இலங்கையர்கள் நேற்று நாட்டை விட்டு புறப்பட்டுச் சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இஸ்ரேலின் நிர்மாணத் துறையின் கீழ் உள்ள பிரிவுகளுக்கு, இதுவரை 413 இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு சென்றுள்ளனர்.

பராமரிப்பு சேவைகள், கட்டட நிர்மாண வேலைகள், உணவகங்கள் மற்றும் விடுதிகள் உள்ளிட்ட துறைகளில் வேலைவாய்ப்புகளுக்கு செல்வதற்கு தற்போது இலங்கையர்களுக்குச் சந்தர்ப்பம் காணப்படுவதாகவும், அந்த பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# குகைக்குள் பெண்ணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூன் 06

மொனராகலை-தொம்பகஹவெல காவல் பிரிவின் ககஹகிவுல பகுதியில் உள்ள ஒரு குகையில் கொலை செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் ஒரு பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாக தொம்பகஹவெல பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, தொம்பகஹவெல பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது இந்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய திருமணமாகாத பெண்.

சடலம் தொடர்பான சம்பவ இடத்திற்குச் சென்ற நீதவான் விசாரணையை சியம்பலாண்டுவ பதில் நீதவான் மேற்கொண்டார். சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. தொம்பகஹவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# டெங்கினால் இதுவரை 13 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 06

நாட்டில் இந்த ஆண்டு இதுவரை 24,180 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், 13 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கண்டி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக நிபுணர் டாக்டர் பிரசிலா சமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் டெங்கு பரவலில் விரைவான அதிகரிப்பு காணப்படவில்லை என்றாலும், இடைவிடாத மழையுடன் டெங்கு கொசுக்கள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய இடங்களில் அதிகரிப்பு காரணமாக பதிவான நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

# சமுர்த்தி சட்டத்தை திருத்த அரசாங்கம் நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 06

சமுர்த்தி சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலத்தை முன்வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கிராமிய அபிவிருத்தி மேம்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் தொடர்புடைய சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் விதிகளின் கீழ் சமுர்த்தி சமூக வங்கிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், சமுர்த்தி சமூக வங்கி சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்வதற்கும் தொடர்புடைய சட்டமூலம் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் சமுர்த்தி திருத்தச் சட்டம் என்று பெயரிட திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# வடபகுதிக்கான ரயில் சேவைகள்; சபையில் காதர் மஸ்தான் கேள்வி

கொழும்பு, ஜூன் 06

வட பகுதிக்கான ரயில் சேவைகளில் நிலவும் பிரச்னைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சில கேள்விகளை எழுப்பியிருந்ததுடன், கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தார்.

2020 ஆம் ஆண்டுடன் கொழும்பு மற்றும் காங்கேசன்துறைக்கு இடையிலான சிறிதேவி ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டதையும், 2023 ஆம் ஆண்டுடன் உத்தரதேவி ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டதையும் அமைச்சர் அறிவாரா என கேள்வி எழுப்பிய அவர், அந்த சேவைகளை மீள ஆரம்பிக்குமாறும்கோரியிருந்தார் அத்துடன், பெலியத்த முதல் அனுராதபுரம் வரையில் இயக்கப்படும் ரஜரட்ட ரெஜின ரயில் சேவையை வவுனியா வரையில் நீடிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த சேவை அநுராதபுரம் வரை மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதால் வவுனியாவுக்கு பயணிக்கும் பலர் சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர் தெரிவித்தார்.

மேலும் சனி மற்றும் ஞாயிற் றுக் கிழமைகளில் முன்னெடுக்கப்படும் கொழும்பு - காங்கேசன்துறைக்கு இடையிலான குளிரூட்டப்பட்ட அதிவேக ரயில் சேவையினை கிழமை நாட்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், யாழ் தேவி ரயில் சேவையை மீண்டும் கல்கிஸை வரையில் முன்னெடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கோரியிருந்தார்.

இதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க, இந்த கேள்விகளுக்குத் திருப்தியான பதில்களை வழங்க முடியாதுள்ளதாகவும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை (இன்று) இதற்கு உரிய பதிலொன்றை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (அ)

# நீதி அமைச்சருக்கு எதிராக வழக்கு தொடரும் எதிரணி?

கொழும்பு, ஜூன் 06

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் சிவில் அமைப்புக்களும் இதற்கு ஆயததமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றை அவமரியாதை செய்ததாக நீதி அமைச்சருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் மொறட்டுவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போது நீதியமைச்சர் ஹர்ஷன, வெளியிட்ட கருத்து நீதிமன்றை அவமரியாதை செய்யும் வகையிலானது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், தாம் நீதிமன்றை அவமரியாதை செய்யவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரயிலில் மோதுண்டு தம்பதி உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 06

தெஹிவளை ரயில் பாதையில் பயணித்த தம்பதியொன்று கொழும்பு கோட்டையில் இருந்து அளுத்கம நோக்கி பயணித்த ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பதுளை, பதுலுபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 58 மற்றும் 59 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முகக்கவசம் அணியுங்கள்!

**பொது மக்களுக்கு அறிவுறுத்து**

கொழும்பு, ஜூன் 06

**சுவாச நோய் அறிகுறிகள் இருப்பின் முகக் கவசம் அணிய வேண்டும் என கொழும்பு சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நல வைத்தியர் தீபால் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

குறிப்பாக, சன நெரிசலான இடங்களுக்குச் செல்லும்போது, நாள் பட்ட நோய்கள் உள்ளவர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள், முக கசவம் அணிவது முக்கியம் எனவும் அவர் கூறினார்.

சிக்கின்குனியா மற்றும் டெங்கு அறிகுறிகள் இருந்தால், முதல் சில நாட்களில் அனைவரும் நுளம்பு வலையைப் பயன்படுத்துவது முக்கியம் எனவும் இதனால் மற்றவர்களுக்கு நோய் பரவுவது தடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பாடசாலை அல்லது வேலையிலிருந்து வீடு திரும்பிய பிறகு அல்லது வெளியில் சென்ற பிறகு உங்கள் கைகளை நன்கு கழுவுவது முக்கியம் எனவும் மேலும் உங்கள் முகத்தை அடிக்கடி தொடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் வைத்தியர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை நாடு முழுவதும் இன்புளூவன்ஸா மற்றும் கொரோனா வைரஸின் திரிபு உருவாகும் போக்கு காணப்படுவதாக சுகாதார சேவைகள் மேம் பாட்டு பணியகம் எச்சரித்துள்ளதால், அலுவலக வளாகங்களிலும் அனைத்து பொது இடங்களிலும் முகக்கவசங்களை அணியுமாறு தங்கள் ஊழியர்களுக்கு அறிவிக்குமாறு மேல் மாகாண தலைமைச் செயலகம் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கண்ணிவெடிகளை அகற்ற ஜப்பான் அரசுடன் ஒப்பந்தம்




கொழும்பு, ஜூன் 06.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகளை அகற்றி 4 ஆயிரத்து 462 பேரை மீள்குடியேற்றி வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்பாட்டுக்காக, கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான மக் நிறுவனம், ஜப்பான் அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை கண்ணிவெடி இல்லாத நிலையை அடைவதற்கு, ஜப்பான் அரசாங்கத்தின் நீண்டகால ஒத்துழைப்பின் தொடர்ச்சியாக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.


இந் நிகழ்வில் ஜப்பான் தூதரகத்தின் அதிகாரி கமோசிடா நோக்கி, கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி சிங்கி கார்வெல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுவரை, ஜப்பான் அரசாங்கத்தின் ஆதரவுடன், மக் நிறுவனமானது வடக்கு கிழக்கில் 29 இலட்சத்து 28 ஆயிரத்து 832 கன மீற்றர் நிலத்தை விடுவித்துள்ளதுடன் 6 ஆயிரத்து 918 கண்ணிவெடிகளை பாதுகாப்பாக அகற்றி அழித்துள்ளன என அந் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர் என தெரிவித்த அவர், இந்த புதிய திட்டம் மேலும் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 936 கனமீற்றர் நிலத்தை விடுவிக்கவும், மேலும் 4 ஆயிரத்து 462 பேரை மீள்குடியேற்றம் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் என தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் அமைதி மற்றும் வளர்ச்சியை முன்னேற்றுவதற்கும் கண்ணிவெடி அகற்றுதல் முக்கியமானது என்ற அடிப்படையில் 2002 முதல் 10 கோடியே 11 இலட்சத்து 82 ஆயிரத்து 769 கனமீற்றர் நிலத்தை மக் நிறுவனம் கண்ணிவெடிகள் அற்ற பிரதேசமாக விடுவித்துள்ளது. (அ)

# வாகன இறக்குமதி வருமானம் உயர்வு!



கொழும்பு, ஜூன் 06

2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வாகன இறக்குமதி மூலம் அரசாங்க வருவாய் ரூ.450 பில்லியனை எட்டும் என்று திறைசேரி அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பொது நிதி தொடர்பான பாராளுமன்றக் குழுவின் முன் பேசிய அதிகாரிகள், வாகன இறக்குமதியிலிருந்து மட்டும் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ரூ.136 பில்லியன் வருவாய் ஏற்கனவே சேகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

வாகன இறக்குமதிக்காக இதுவரை 596 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கடன் கடிதங்கள் திறக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த அனைத்து தொடர்புடைய வரி வருவாய்களும் இந்த கடன் கடிதங்களில் இருந்து பெறப்பட்டால், மொத்த வசூல் ரூ. 300 பில்லியனை தாண்டும், இது இன்னும் 7 மாதங்கள் மீதமுள்ள நிலையில் ரூ. 450 பில்லியன் இலக்கை அடைவதில் அரசாங்கத்தின் நம்பிக்கையை மேலும் வலுப் படுத்துவதாகவும் குறிப்பிட்டனர். (அ)

## மோசடி குற்றச்சாட்டில் சீனப் பிரஜை கைது!



கொழும்பு, ஜூன் 06

மோசடி குற்றச்சாட்டின் பேரில் சீனப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுலா விஸா வழங்குவதாகக் கூறி 1.5 மில்லியன் ரூபா பணத்தையும், அமெரிக்க டொலர்களை வழங்குவதாகக் கூறி 191,600 ரூபா பணத்தையும் மோசடி செய்ததாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து விசாரணைகளை நடத்திய போதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## இலங்கைக்கு 650 மில்லியன் டொலர் நேரடி அந்நிய முதலீடு

கொழும்பு, ஜூன் 06

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கைக்கு 650 மில்லியன் டொலர் நேரடி அந்நிய முதலீடு வந்துள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

64 திட்டங்களுக்காக இவ்வாறு 650 மில்லியன்டொலர் முதலீடு வந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நமது நாட்டுக்கு எந்தளவு முதலீட்டாளர்கள் வந்துள்ளார்கள் என்று பாருங்கள். இந்த காலாண்டில் மட்டும், 650 மில்லியன் டொலர் அந்நிய நேரடி முதலீடு வந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் மட்டும் 483 டொலர் மில்லியன் அந்நிய நேரடி முதலீடு வந்தன. 2024 ஆம் ஆண்டில் 724 அந்நிய நேரடி முதலீடு வந்தன. ஆனால் வருடம் முழுவதும் 93 திட்டங்கள் மட்டுமே வந்தன. இப்போது எங்களிடம் முதல் காலாண்டில் மாத்திரம், 64 திட்டங்கள் உள்ளன. 650 மில்லியன் டொலர் அந்நிய நேரடி முதலீடு வந்துள்ளன- என்றார். (அ)

## கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் பயணிகளுக்கு 24 மணி நேரமும் பஸ் சேவை

கொழும்பு, ஜூன் 06

விமான நிலையத்துக்கு வருகை தரும் மக்களுக்காக பொதுப் போக்குவரத்து சேவையொன்றின் அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஆரம்ப நடவடிக்கையாக நேற்று முன் தினம் முதல் விமான நிலையத்தில் இருந்து கொழும்பு வரை தனியார் பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் எவரி வத்தை பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் இந்த பஸ் நேற்று முன் தினம் முதல் விமான நிலையத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. இந்த பஸ் சேவையை 24 மணி நேர சேவையாக நடைமுறைப் படுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

தற்போது தனியார் துறையின் பஸ் ஒன்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பயணப் பொதிகளை கொண்டு வரும் வசதிகளுடன் பஸ் சேவை ஒன்றை இந்த சேவைக்கு ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு தெரிவித்தார்.

இந்த சேவையை வழங்கும் பஸ்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மக்கள் அபிமான சேவையை வழங்குவதற்கான முறையான பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் இச்சேவையில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

290 ரூபாய் கட்டணத்திற்கு கட்டுநாயக்கவிலிருந்து கொழும்பு நோக்கி அதி சொகுசு வசதிகளுடன் செல்வதற்கான வாய்ப்பு நேற்று முன் தினம் முதல் பயணிகளுக்கு கிடைத்துள்ளது. (அ)

## உப்பு பயன்பாடு குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 06


உணவுப் பொருட்களின் உள்ளடக்கம் தொடர்பில் பொதுமக்கள் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் இதனால் உடலுக்கு ஏராளமான சுகாதார பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பால் பரிந்துரைக்கப்பட்ட அளவின் படி, ஒரு நாளைக்கு ஒரு தேக்கரண்டிக்கும் குறைவாக இருந்தாலும், இலங்கையர் ஒரு நாளைக்கு இரண்டு-மூன்று தேக்கரண்டி உப்பை உட்கொள்வதற்குப் பழகிவிட்டதாக அமைச்சின் சுற்றுச்சூழல், தொழில், சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் இயக்குநர் டாக்டர் சாந்தனி விதானா குறிப்பிட்டுள்ளார்.

நாளை கொண்டாடப்படவுள்ள உலக உணவுப் பாதுகாப்புத் தினத்திற்காக அமைச்சின் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதை விளக்கினார்.

செயற்கை வண்ணங்கள், சுவையூட்டிகள், பாதுகாப்புகள் மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து விழிப்புடன் இருப்பதன் முக்கியத்துவத்தை அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"மீனவனின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையா?"

# நிலாவெளியில் மீனவர்கள் வீதியை மறித்து போராட்டம்

திருகோணமலை, ஜூன் 06

**திருகோணமலை - திருக்கடலூர் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை நிலாவெளி பகுதியில் பிரதான வீதியை மறித்து கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

மூன்று நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பு, வாழைச்சேனை கடற்பரப்பில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த சம்பவத்தில் திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகள் கடுமையாக சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது மீனவர்களின் பிரதான குற்றச்சாட்டாகும். எனவே, தாக்கியவர்களை உடனடியாக கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் போது "மீனவனின் நிலமையை பார்", "மீனவனின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையா?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தால் குறித்த பகுதியில் சில மணிநேரத்துக்கு போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டிருந்தது. (எ)

# சுற்றாடல் தின நிகழ்வு

அக்கரைப்பற்று, ஜூன் 06


உலக சுற்றாடல் தினத்தை யொட்டி அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றாடல் தின நிகழ்வு நேற்று பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

அதிபர் ஏ.எல். நஸீபா இக்பால் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தின் பிரதேச பொறியியலாளர் எம்.எம். முனவ்வர், சமூகவியலாளர் எம்.எஸ்.எம். சறூக், பிரதி அதிபர்களான என்.எம்.சாலிஹ், எம்.ஏ. சலாகுதீன் உதவி அதிபர்களான ஏ.எல். மஹ்றூப், எஸ்.ரி. சம்சுதீன் உள்ளிட்ட ஆசிரியர்கள், துறை சார் முக்கியஸ்தர்கள் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மத்தியில் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்து விசேட செயலமர்வு நடைபெற்றது. அத்தோடு, கல்லூரி வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகளால் பாடசாலை மாணவர்களுக்கு பயன் தரக்கூடியதும் சுற்றாடலை கட்டுக் கோப்புடன் பசுமை மிக்கதாக கையாளும் விடயங்கள் மற்றும் உயிர்ப் பல்வகைமை தொடர்பிலான கையேடுகளும் பாடசாலை நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது. (எ)





# அறுகம்குடாவுக்கு அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகை

பொத்துவில், ஜூன் 06

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் அதிகளவானோர் பொத்துவில் அறுகம் குடா பிரதேசத்துக்கு படையெடுத்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள அறுகம்குடா கடற்கரைப் பிரதேசம் பல்வேறு சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளதால் இந்தப் பிரதேசத்துக்கு தினமும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். (எ-01)

# உணவுப் பாதுகாப்பு தினத்தையொட்டி சாய்ந்தமருதில் சோதனை நடவடிக்கை

சாய்ந்தமருது, ஜூன் 06

உலக உணவுப் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு அம்பாறை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்கள் பல நேற்றுப் பரிசோதனை செய்யப்பட்டன.

இந்தப் பரிசோதனை நடவடிக்கையானது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் மேற்பார்வையில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரீன் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது உணவுப் பொருட்களின் தரம், பராமரிப்பு நிலை, சமையலறையின் சுகாதாரம், உணவு செய்முறை முறைகள் மற்றும் வேலை செய்பவர்களின் மருத்துவச் சான்றிதழ்கள் போன்றன கண்காணிக்கப்பட்டன. மேலும் உணவு கையாளும் மூன்று நிறுவனங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நிறக் குறியீடுகள் இல்லாத உணவுகள், முறையாக பொதி செய்யப்படாத உணவுகள், மருத்துவச் சான்றிதழ் இல்லாது உணவு கையாளும் நபர்கள்,

போன்ற குற்றங்கள் கண்டறியப்பட்டு உணவுகள் கைப்பற்றப்பட்டன.

இது தவிர உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. உணவுப் பாதுகாப்பு என்பது பொதுமக்களின் உடல் நலத்துடன் நேரடியாக தொடர்புடையதாகும். உணவகங்களில் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது இனிவரும் காலங்களில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தெரிவித்தார். (எ-01)


# போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு

சாய்ந்தமருது, ஜூன் 06

"போதையற்ற மருதூர்" எனும் தொனிப் பொருளில் அம்பாறை, சாய்ந்தமருதில் போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு நேற்று முன்தினம் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் வழிகாட்டலில் பிரதேச சமுர்த்தி சமுதாய அமைப்பு மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவு என்பன இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (எ-01, 06)



# கல்முனையில் சுற்றாடல் தின விழிப்புணர்வு ஊர்வலம்

கல்முனை, ஜூன் 06

சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் கடந்த சில ஆண்டுகளாகவே உலகம் முழுவதிலும் உணரப்படுகின்ற ஒன்றாக இருந்து வருகின்றது. மனித நடவடிக்கைகளால் சூழலில் ஏற்பட்டு வரும் விரும்பத் தகாத மாற்றங்களும் அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும் இது தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. இதனை மையமாக கொண்டு டயகோணியா மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி என்பனவற்றின் அனுசரணையில் நேற்று 5ஆம் திகதி விழிப்பூட்டல் ஊர்வலமும் கருத்தரங்கும் அம்பாறை கல்முனையில் நடைபெற்றது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜி.ஏ. ரிஷாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், மாவட்ட சுற்றாடல் ஆணையாளர் எம்.எல்.எம். முதர்ரீஸ்,




வலய ஆணையாளர் எம். எம். சியாம், சுற்றாடல் அதிகார சபை உயர் அதிகாரிகள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்னோடி மாணவர்கள், கல்முனை வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் வீதி மற்றும் ரயில் பாதைகள் தகர்ப்பு

## உக்ரைன் இராணுவம் தகவல்

கீவ், ஜூன் 06

**கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் வீதி மற்றும் ரயில் பாதையை தகர்த்து விட்டோம் என்று உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.**

ரஷ்யாவின் முக்கிய 5 விமான படைத் தளங்கள் மீது உக்ரைன் இராணுவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒரே நேரத்தில் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. "ஒப்ரேஷன் ஸ்பைடபர் வெப்" என்ற இரகசிய குறியீடுடன் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ரஷ்யாவின் அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கக் கூடிய 41 அதிநவீன போர் விமானங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

இந்த நிலையில் உக்ரைன் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில், கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் வீதி மற்றும் ரயில் பாதைகளை உள்ளடக்கிய மேம்பாலத்தை தகர்த்துவிட்டோம். இதற்காக 1100 கிலோ எடை கொண்ட வெடிபொருட்களை பயன்படுத்தினோம். இந்தத் தாக்குதலில் தண்ணீருக்கடியில் இருந்த பாலத்தின் தூண்கள் சேதமடைந்துள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

(எ)

# கனடாவில் துப்பாக்கிச் சூடு


றொரண்டோ, ஜூன் 06

கனடாவின் றொரண்டோ நகரில் லோரன்ஸ் ஹைட்ஸ் பகுதியில் நேற்று முன்தினம் மாலை திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் ஒருவர் பலியானார். ஒரு பெண் மற்றும் 4 ஆண்கள் காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு, சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

எனினும், துப்பாக்கி குண்டு காயங்களால் அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 18 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

இதில் பல்வேறு நபர்கள் மீது சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால், அவர்களை பற்றிய விவரங்களை வெளியிட முடியாது என பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் வாகனங்களில் தப்பினரா? நடந்து சென்றனரா? துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் என்னவென்றோ பொலிஸார் தெரிவிக்கவில்லை. ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

(எ)



# 2ஆம் உலகப்போரில் வீசிய 3 குண்டுகள் கண்டெடுப்பு

## ஜேர்மனியில் பரபரப்பு

கலோன், ஜூன் 06

ஜேர்மனியின் கலோன் நகரில் 2ஆம் உலகப் போரின்போது வீசப்பட்ட 3 அமெரிக்க வெடி குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. வீதிக் கட்டமைப்பு பணியின்போது இந்த வெடிகுண்டுகள் வெளிப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, பொதுமக்கள் பலரும் நகரிலிருந்து நேற்று முன்தினம் வேறு இடங்களுக்குப் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டனர். வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்யும் பணிக்காக நகரில் உள்ள 20 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டனர்.

இதற்காக வீடுகள், 58 ஹோட்டல்கள், 9 பாடசாலைகள், மருத்துவமனை ஒன்று மற்றும் பல்வேறு அருங்காட்சியகங்கள் மற்றும் அலுவலக கட்டடங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

ஒரு மணிநேரத்தில் அந்தக் குண்டுகள் செயலிழக்க செய்யப்பட்டன என அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் முடிந்து 80 ஆண்டுகளான பின்னரும், வெடிக்காத குண்டுகள் ஜேர்மனியில் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

(எ)

நாம் இஸ்லாமிய நாடுகள்

# பாகிஸ்தான் அழைப்பை நிராகரித்தது மலேசியா

கோலாலம்பூர், ஜூன் 06

ஐக்கிய நாடுகள் சபையில் காஷ்மீர் விவகாரம் எனக்கூறி ஒப்ரேஷன் சிந்தூர் பற்றிய தூதுக் குழுக்களின் அனைத்து நடவடிக்கைகளையும் தடுப்பதற்காக பாகிஸ்தான் முன்வைத்த கோரிக்கையை மலேசியா நிராகரித்துள்ளது.

மத அடையாளத்தைப் பயன்படுத்த முயன்ற பாகிஸ்தான், சஞ்சய் குமார் ஜா தலைமையிலான இந்தியக் குழுவின் அனைத்து நடவடிக்கைகளையும் இரத்துச் செய்யுமாறு மலேசிய அரசு அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது. பாகிஸ்தான் தரப்பிலிருந்து, "நாங்களும் இஸ்லாமிய நாடு,



நீங்களும் இஸ்லாமிய நாடு, மலேசியாவில் இந்தியத் தூதுக் குழுவின் அனைத்து நிகழ்ச்சிகளையும் இரத்துச் செய்து விடுங்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கோரிக்கையை நிராகரித்த மலேசிய அரசு, 9 பேர் அடங்கிய இந்திய தூதுக் குழுவுக்கு 10 முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.

(எ)

# காஸாவில் 55 ஆயிரத்தை நெருங்கிய பலி எண்ணிக்கை

காஸா, ஜூன் 06

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் காஸாவில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 54 ஆயிரத்து 510 ஆக அதிகரித்தது.

காஸா முனையில் இஸ்ரேல் ஓராண்டுக்குமேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், காஸா முனையில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் பலி எண்ணிக்கை 55 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. காஸாவில் இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் காஸாவில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 54 ஆயிரத்து 510 ஆக அதிகரித்தது.



# தனுஷ்கோடியில் கடும் காற்று

இராமேஸ்வரம், ஜூன் 06

தனுஷ்கோடி கடற்பகுதியில் கடும் காற்றால் தேசிய நெடுஞ்சாலை முழுவதும் மணல் பரவிக் கிடப்பதால், அரிச்சல்முனைக்கு வாகனங்களில் செல்லும் சுற்றுலாப் பயணிகள் சிரமத்துக்கு உள்ளாகினர்.

தென்மேற்குப் பருவக் காற்று தொடங்கியதால் மன்னார் வளைகுடா மற்றும் பாக்கு நீரிணை பகுதிகளில் மணிக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசக்கூடும் என்று இந்திய வானிலை மையம் அறிவித்திருந்தது. இதன்படி, கடந்த ஒரு வாரமாக தனுஷ்கோடி, முகுந்தராயர் சத்திரம், அரிச்சல்முனை ஆகிய கடலோரப் பகுதிகளில் கடும் காற்று வீசி வருகிறது.

இதனால் இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடி அரிச்சல் முனை வரையிலும் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை ஆங்காங்கே மணல் மூடியுள்ளது. இதேபோன்று, அரிச்சல்முனை பகுதியிலும் மணல் நிரம்பிக் காணப்படுகிறது. இதனால் தனுஷ்கோடிக்கு சுற்றுலா செல்லும் வாகன சாரதிகள், பொது மக்கள் கடும் சிரமம் அடைந்து வருகின்றனர்.


(எ)

# பிரான்ஸ் ஜனாதிபதி மெழுகு சிலை திருட்டு

பாரிஸ், ஜூன் 06

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோனின் மெழுகு சிலை திருடப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனிடையே, ரஷ்யாவுடன் பிரான்ஸ் தொடர்ந்து வரும் பொருளாதார உறவைக் கண்டித்து கிரீன்பீஸ் என்ற அமைப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். மேலும், ரஷ்யாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை முழுமையாக துண்டிக்காத பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.



இதன் ஒரு பகுதியாக, கிரேவின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனின் மெழுகு சிலையை போராட்டக்காரர்கள் திருடிச் சென்றனர். இது இலங்கை பெறுமதியில் 139 இலட்சம் ரூபாயாகும். இது குறித்து தகவல் அறிந்து சென்ற பொலிஸார் சிலையை மீட்டு மீண்டும் அருங்காட்சியகத்திடம் ஒப்படைத்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் அரையிறுதியில் ஜோகோவிச்

பாரிஸ், ஜூன் 06

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் நோவக் ஜோகோவிச் அரையிறுதிக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் செர்பியாவின் முன்னணி வீரர் ஜோகோவிச் ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வேரெவ் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் 4-6, 6-3, 6-2, 6-4 என்ற செற் கணக்கில் ஸ்வேரெவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ஜோகோவிச், இத்தாலியின் ஜன்னிக் சின்னெர் உடன் மோதவுள்ளார். (எ)

# 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி

### ஒருநாள் தொடரையும் இழந்தது மே. இ. தீவுகள்

லெய்செஸ்டர், ஜூன் 06

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 3-0 என இங்கிலாந்து கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்று வரும் ஒருநாள் தொடரில் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1- 0 என முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 366 ஓட்டங்கள் குவித்தது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக எமி ஜோன்ஸ் 129 ஓட்டங்களும் பியூமாண்ட் 106 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து 367 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணியினர், இங்கிலாந்தின் அபார பந்துவீச்சை தாக்குப்பி



டிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். இதன் காரணமாக அந்த அணி 45. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 223 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதன் மூலம் 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி நாளை 7ஆம் திகதி நடைபெறுகிறது. (எ)



## அமெரிக்க வீராங்கனை கோகோ காப் வெற்றி

பாரிஸ், ஜூன் 06

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் வெற்றி பெற்ற அமெரிக்க வீராங்கனை கோகோ காப் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இந்த தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் அமெரிக்காவின் கோகோ காப், சக நாட்டு வீராங்கனை மேடிசன் கீஸ் உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடி கோகோ காப் அடுத்த இரு சுற்றுகளை 7-6(8-6) 6-7(6-8) , 6-4, 6-1 என்ற செற்களில் வென்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)

## பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் மிர்ரா ஆண்ட்ரீவா தோல்வி


பாரிஸ், ஜூன் 06

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் ரஷ்யாவின் மிர்ரா ஆண்ட்ரீவா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான மிர்ரா ஆண்ட்ரீவா, பிரான்ஸின் லோயிஸ் போய்சனை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில் எளிதில் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட மிர்ரா ஆண்ட்ரீவா 6-7 (6-8), 3-6 என்ற செற் கணக்கில் லோயிஸ் போய்சனிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரிலிருந்து வெளியேறினார். (எ)





## பி. வி. சிந்து வெற்றி

ஜகார்த்தா, ஜூன் 06

இந்தோனேஷிய ஓபின் பட்மிண்டன் தொடரில் வெற்றி பெற்ற இந்தியாவின் பி. வி. சிந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தோனேஷிய ஓபின் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் போட்டி தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்திய வீராங்கனை பி. வி. சிந்து, ஜப்பானின் நஜோமி ஒகுஹராவை எதிர்கொண்டார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய பி. வி. சிந்து 22-20, 21-23, 21-15 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

# ரி - 20 தொடருக்கான ஆஸி அணி அறிவிப்பு

சிட்னி, ஜூன் 06

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான ரி - 20 தொடரில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது. இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் ரி - 20 போட்டி ஜூலை 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இந்தத் தொடருக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. மிட்செல் மார்ஷ் தலைமையிலான இந்த அணியில் கேமரூன் கிரீன், டிம் டேவிட், ஜோஷ் ஹேசில்வுட், மக்ஸ்வெல் போன்ற முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இருப்பினும் இந்த அணியில் மிட்செல் ஸ்டார்க், கம்மின்ஸ், டிராவிஸ் ஹெட், ஸ்ரொய்னிஸ் போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெறவில்லை.

அவுஸ்திரேலிய அணி விவரம் பின்வருமாறு:- மிட்செல் மார்ஷ், சீன் அபோட், கூப்பர் கோனொலி, டிம் டேவிட், பென் துவார்ஷூயிஸ், நாதன் எல்லிஸ், கேமரூன் கிரீன், ஆரோன் ஹார்டி, ஜோஷ் ஹேசில்வுட், ஜோஷ் இங்கிலிஸ், ஸ்பென்சர் ஜோன்சன், மாட் குஹ்னெமன், கிளென் மக்ஸ்வெல், மிட்ச் ஓவன், மேத்யூ ஷார்ட், அடம் ஸம்பா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (எ)

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் பங்களாதேஷ் அணி அறிவிப்பு

டாக்கா, ஜூன் 06

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ் தொடரில் விளையாடவுள்ளது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் எதிர்வரும் 17ஆம் திகதியும் 2ஆவது டெஸ்ட் கொழும்பில் 25ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. 2025 - 27 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக நடைபெறவுள்ளதால் இந்தத் தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த நிலையில் இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நஜ்முல் ஹொஸைன் சாண்டோ அணித் தலைவராக தொடர்வார்.

பங்களாதேஷ் அணி விவரம் வருமாறு,

நஜ்முல் ஹொஸைன் சாண்டோ, ஷத்மான் இஸ்லாம், அனாமுல் ஹக் பிஜோய், மொமினுல் ஹக் ஷோராப், முஷ்பிகுர் ரஹீம், லிட்டன் தாஸ், மஹிதுல் இஸ்லாம் பூயான், ஜாக்கர் அலி அனிக், மெஹிதி ஹசன் மிராஸ் (துணைத் தலைவர்), தைஜூல் இஸ்லாம், நயீம் ஹசன், ஹசன் முராத், எபடோட் ஹொஸைன் சௌத்ரி, ஹசன் மஹ்மூத், நஹித் ராணா, சையத் கலீத் அகமது ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள்...

போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில் நீதிமன்றத்தால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிறுமிகளும் அடங்குவர் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் ஆளுநர் செயலகத்தில் போதைப்பொருள் பாவனைக்கு அடியையானவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் நிலையம் ஒன்றை வடக்கில் ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

"மாணவர்களிடையே உயிர்கொல்லி போதை மாத்திரையின் பயன்பாடு அதிகரித்துள்ளது" என்பதை சுட்டிக்காட்டிய சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன், "போதைமாத்திரைகளை வடக்குக்கு கொண்டுவரும் மொத்த விற்பனையாளரிடமிருந்து அந்த மாத்திரைகள் விநியோகிக்கும் சங்கிலியை கண்காணித்து சோதனை செய்தாலே இதனை இலகுவாக கட்டுப்படுத்த முடியும்", என்றும் கூறினார். (ஐ-02-05)

## உரித்தை...

உட்படுத்தப்பட்டு அறிக்கை பெற்றுக் கொள்வது அவசியமாகும். அறிக்கை கிடைத்ததன் பின்னர், அவற்றை உரியவர்களுக்கு ஒப்படைப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

போரால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த நகைகளுக்கான உரித்தை உறுதிப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். பொதுமக்களால் உரித்தை உறுதிப்படுத்த முடியாத தங்க நகைகளை வடக்கு மாகாண அபிவிருத்திக்கு பயன்படுத்தும் வகையில் பொது நிதியம் ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளோம்.

வடக்கு அபிவிருத்திக்கு இந்த தங்க நகைகளில் ஒரு தொகையும், அரசாங்கத்தால் ஒரு தொகையும் வைப்பிலிடப்படும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இந்த அபிவிருத்தி திட்டத்தில் பங்குப்பற்றுவதற்கான வாய்ப்பும் அளிக்கப்படும் - என்றார். (ஐ)

## ஆதரவளிக்கு...

"உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஈ. பி. டி. பியின் ஆதரவை கோரியுள்ளோம். ஆட்சியில் பங்கெடுக்காமல் வெளியிலிருந்தே ஆதரிக்குமாறு கோரியுள்ளோம். ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஆதரவு வழங்கினால் வடக்கு, கிழக்கில் 35 சபைகளுக்கும் மேல் நாம் ஆட்சியமைப்போம்" - என்றார்.

டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடுகையில், "இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ கோரிக்கை கட்சி மட்டத்தில் மக்கள் நலன் சார்ந்து பரிசீலிக்கப்படும்", என்று சொன்னார். (ஐ)

## மனித...

நடைபெற்றது.

நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் செம்மணி சந்தியில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் சங்கத்தின் அழைப்பின்பேரில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "செம்மணி புதை குழிக்கு நீதி வேண்டும்", "மறைக்காதே மறைக்காதே, புதை குழிகளை மறைக்காதே", "எங்கே எங்கே உறவுகள் எங்கே", "இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்" என்று குரலெழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். போராட்டத்தின் நிறைவில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. (ஐ)

## குருந்தூர்...

பண்படுத்திய விவசாயிகள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தினர் என்ற அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், நேற்றைய தினம் இந்த வழக்கு நீதிவான் ரீ. பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விவசாயிகள்மீது வழக்கை தொடர்ந்து நடத்தக்கூடிய அடிப்படை முகாந்திரங்கள் இல்லை. குறித்த பிரதேசம் தொல்பொருள் திணைக் களத்துக்குரியது என்று வர்த்தமானி அறிவித்தல் பிரசுரமாகவில்லை என்பதை வழக்கு தொடுநர் தரப்பு ஏற்றுக் கொண்டது.

இதையடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விவசாயிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் விவசாயிகளின் சார்பில் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பிலான 10க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரியாலை...

காணப்பட்டுள்ளன.

அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் கண்டறியப்பட்ட மனித புதைகுழியில் இரண்டாம் கட்டமாக 4ஆவது நாளாக நேற்றும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, மேலும் 5 எலும்புக்கூட்டு தொகுதிகள் கண்டறியப்பட்டிருந்தன.

இதனிடையே, இதனை மனித புதைகுழியாக அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இன்றைய தினம் நீதிவான் கட்டளை பிறப்பிக்கவுள்ளார்.

முன்னதாக, மூன்றுக்கு மேற்பட்ட எலும்புக்கூட்டு தொகுதிகள் கண்டறியப்பட்டமையால் இதனை மனித புதைகுழியாக அறிவிக்கக் கோரி சட்டத்தரணி வி. எஸ். நிரஞ்சன் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான ஆதாரங்கள் - அறிக்கைகளை வெள்ளிக்கிழமை (இன்று) சமர்ப்பிக்குமாறு நீதிவான் ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டிருந்தார். இதன்படி, இன்றைய தினம் மனித புதைகுழியாக அறிவிப்பது தொடர்பில் கட்டளை பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உணர்வெழுச்சி...

கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் இணைத் தலைவர் த. சித்தார்த்தன், ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, பொன். சிவகுமாரனின் சகோதரி உட்பட பலர் பங்கேற்றனர்.

இதேசமயம், யாழ். பல்கலைக்கழகத்திலும் சிவகுமாரனுக்கு நினைவேந்தல் நடைபெற்றது.

தமிழின விடுதலை போராட்ட வரலாற்றின் முன்னோடிகளில் ஒருவரான பொன். சிவகுமாரன் மாணவர் பேரவையில் இணைந்து செயல்பட்டிருந்தார். ஈழ விடுதலைப் போராட்டத்தின் முதல் தாக்குதல் என்றறியப்படும் 1971இல் யாழ். நகர முதல்வரான அல்பிரட் துரையப்பாவின் வாகனத்தில் குண்டை பொருத்தி வெடிக்க வைத்திருந்தார். இதையடுத்து, கைதுசெய்யப்பட்ட அவர், விடுதலையான பின்னர் தமிழாராய்ச்சி மாநாட்டில் குழப்பம் ஏற்படுத்திய உதவி பொலிஸ் அதிபர் சந்திரசேகரா என்பவரை கொல்ல வேண்டும் என்று வெளிப்படையாக கூறினார். இதற்காக தேடப்பட்ட அவரை உரும்பிராயை சேர்ந்த நடராஜா என்பவர் காட்டிக் கொடுத்தார். பொலிஸாரின் முற்றுகையை அடுத்து அவர்களிடம் பிடிபடாமல், சயனைற் அருந்தி சிவகுமாரன் உயிர்நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாகாண சபைகள் தேர்தல் திருத்த சட்டம் பாராளுமன்றில்!

கொழும்பு, ஜூன் 06

மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் இரா. சாணக்கியன் எம். பி. இந்த சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பித்தார். இதனை, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாம் காரியப்பர் வழிமொழிந்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி கடந்த மே 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதி வலுவிலிருந்த 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தால் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எவ்வாறிருப்பினும், 2017 செப்ரெம்பர் 22ஆம் திகதியிலிருந்து தொடங்கி - இந்த சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதி வரைக்குமான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்கு பங்கமின்றி, அத்தகைய செயல் 1988ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இச்சட்டம் வலுவுக்கு வருகின்ற திகதியிலிருந்து பயனுறுவதாக நடைமுறைக்கு வருதல் வேண்டும் ", என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ் அரசு கட்சியை ஆதரிக்க மாட்டோம்

## தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 06

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்க தேசிய மக்கள் சக்தி ஆதரவளிக்கவுள்ளது என்ற தகவலில் எவ் வித உண்மையும் இல்லை என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் சு. கபிலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை உட்பட சில சபைகளில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்க தேசிய மக்கள் சக்தி ஆதரவளிக்கும் என்று வெளியான செய்திகள் தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

தேர்தல் காலத்திலும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக மக்கள் மத்தியில் வதந்திகளை பரப்பியவர்கள் தேர்தலுக்கு பின்னரான ஆட்சி அமைப்புக்கு இடைப்பட்ட இக்காலத்திலும் மக்கள் மத்தியில் வதந்திகளை பரப்பி வருகிறார்கள்.

எமது மக்களை வதந்திகள் மூலமாக வழிநடத்தி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றதாகக் கருதும் எந்தவொரு சுயநல அரசியல் கட்சிகளுடனும் கூட்டுசேரவோ இணைந்து பயணிக்கவோ தேசிய மக்கள் சக்தியினரான நாம் முன்வரப்போவதில்லை என்பதை எமது மக்களுக்கு பொறுப்புடன் அறியத்தருகிறோம்.

எமது மக்கள் வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் எமக்கு வாக்களித்த மக்கள் - வாக்களிக்காத மக்கள் என்ற பேதமின்றி ஒவ்வொருவரும் சமூகம் சார்ந்தும், பிராந்தியம் சார்ந்தும் உயர்வு பெற வலுவான எதிரணியாக செயல்படுவோம் - என்றார். (ஐ)

## போதை அடிமையாளரை...

நேற்றையதினம் ஆளுநர் செயலகத்தில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மீட்க புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்றது.

மேலும், யாழ். மாவட்டத்தில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவது அவசியம் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினரும் கோரி வருகின்றனர். கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் இதற்கான கட்டடம் எம்மால் அடையாளப்படுத்தப்பட்ட போதும் அது பொருத்தமானதல்ல என்று அவர்கள் எமக்கு தெரிவித்தனர். எனவே, மாற்று இடத்தை உடனடியாக அடையாளப்படுத்தி வழங்கவேண்டியுள்ளது. தற்போது அதிகளவு சிறுவர்களும் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையாவதால் உடனடியாக மறுவாழ்வு நிலையம் அமைக்கப்பட வேண்டும் - என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன்போது அச்சுவேலியில் சிறுவர் சான்று பெற்ற பாடசாலைக்கு அண்மையாகவுள்ள வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை திணைக்களத்துக்கு சொந்தமான கட்டடத்தை புனரமைப்பு செய்து பயன்படுத்த முடியும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இதை ஏற்ற ஆளுநர், உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அது இயங்குநிலைக்கு வரும் வரையில் இந்த மாத இறுதிக்குள் உடனடியாக ஏதாவது ஓர் இடத்தை தற்காலிகமாக வழங்கவேண்டும் - என்றும் கேட்டார்.

இதன்போது, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மூடப்பட்ட பாடசாலைகள் சில உள்ளன. அவற்றின் கட்டடங்களை பார்வையிட்ட பின்னர் கட்டடம் ஒன்றை வழங்குவதாகக் கூறினார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தால் பாதுகாப்பு இல்லத்துக்காக அமைக்கப்பட்ட கட்டடத்தை மறுவாழ்வு நிலையத்துக்கு பயன்படுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

## சர்வதேச...

மற்றும் குடும்பத்தவர்களுக்கு நீதியை உண்மையை வழங்குவதை நோக்கிய முக்கிய நடவடிக்கையாக இது அமையலாம். எனினும், இதற்கு சர்வதேச நடைமுறைகளை பின்பற்றி அகழ்வு நடைபெறுவது அவசியமாகும்.

மனித புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அதிகாரிகள் உரிய நிதியை ஒதுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களுக்கும் ஊடகங்களுக்கும் மனித புதைகுழி பகுதிக்கு செல்வதற்கு போதிய அனுமதியை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் இதிலுள்ள முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்களை தெரிவித்து வந்தால் மனித புதைகுழி அகழ்வில் வெளிப்படைத் தன்மை பேணப்படும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# செம்மணி புதைகுழி விசாரணை துரிதம்!

## நீதி அமைச்சர் உறுதி



கொழும்பு, ஜூன் 06

**செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும் அதற்குத் தேவையான நிதியொதுக்கீடு தொடர்பிலும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செம்மணி புதைகுழி தொடர்பில் முன்வைத்த கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கஜேந்திரகுமார் எம்.பி. முன்வைத்த விடயம் தொடர்பில் விசேட கவனத்தை செலுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் படும். அத்துடன் துரிதமாக விசாரணைகளும் முன்னெடுக்கப்படும்.

இதற்கு தேவை யான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்கின்றேன். இதன்படி இது தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் எதிர்வ ரும் நாட்களில் அறிவிக்கின்றேன்-என்றார். (அ)

# பொய்களுக்கு இனி மன்னிப்பு கிடையாது

### சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் பிரதி அமைச்சர் வட்டகல



கொழும்பு, ஜூன் 06

எதிர்க்கட்சிகள் குறிப் பிடும் பொய்கள் சமூகம யமாக் குவதற்கு இனி இடமளிக்க போவதில்லை. அவர்களின் பொய்க ளுக்கு இனி மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க மற்றும் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோரை இலக்காகக் கொண்டு எதிர்க்கட்சியினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

323 கொள்கலன்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் முறையாக விசாரணை செய்யப்படுகிறது.

ஆகவே குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலமளிக்கவேண்டும்.

வெண்ணிற ஆடையணிந்தவர்கள் செய்த ஊழல் மோசடிகளால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. ஒருசில ஊழல்வாதிகள் தற்போது சிறையில் உள்ளார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பிற தரப்பினருக்கு விற்பனை செய்த விவகாரம் உலகில் எங்காவது நடந்ததுண்டா? அவ்வாறான சம்பவம் இலங்கையில் நடந்துள்ளது. அந்த நபர் தற்போதும் பாராளுமன்றத்தில் உள்ளார்-என்றார். (அ)

# பஸ் விபத்துக்களைத் தடுக்க ஏ.ஐ. பயன்படுத்தவுள்ள அரசு!



கொழும்பு, ஜூன் 06

பஸ் விபத்துக்களை தடுக்கும் நோக்கில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை (ஏ.ஐ) அறிமுகம் செய்ய உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரட்நாயக்க இந்த விடயத்தை பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

பஸ் சாரதிகள் நித்திரை கலக்கத்திற்கு உள்ளாவதனால் ஏற்படக்கூடிய விபத்துக்களை தவிர்க்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த உள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக விசேட கருவிகள் விரைவில் பொருத்தப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.எதிர்வரும் இரண்டு மாதங்களில் சுமார் 40 பஸ்களில் இந்த செயற்கை நுண்ணறிவு கருவிகள் பொருத்தப்பட உள்ளன. இந்தக் கருவிகள் மூலம் சாரதிகளுக்கு ஏற்படக்கூடிய நித்திரைக் கலக்கம் கண்காணிக்கப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் ஏனைய பஸ்களிலும் இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கண்காணிப்பு முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# அரசியல் கட்சிகளுக்கு வெளிநாட்டிலிருந்து நிதி

### ஆராய கோருகிறார் கோடீஸ்வரன்

கொழும்பு, ஜூன் 06

அரசியல் கட்சிகளுக்கு நிதி வரும் வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு வழிவகுக்கும் சட்டமும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

"அரசியல் கட்சிகளுக்குரிய நிதி எங்கிருந்து வருகின்றது, அந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்படு கின்றது, எந்த நாட்டில் இருந்து அனுப்படுகின்றது, எந்த அமைப்புகளிடமிருந்து வந்திருக்கின்றது என்பதை விசாரிப்பதற்குரிய எந்தவொரு அமைப்பும் இல்லாத நிலையே காணப்படுகின்றது." - எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் ஏற்படுகின்ற போராட்டங்கள், ஆட்சி மாற்றத்துக்குரிய சதி முயற்சிகள் , பொருளாதார பின்னடைவுகள் என்பவற்றுக்கு கூட கட்சிகளுக்கு வழங்கப்படும் நிதிகள் பயன்படுத்தப்படக்கூடும். எனவே, கட்சிகளுக்கு வரும் நிதியை ஆராய்வதற்காக ஒரு சட்டமூலம் உயரிய சபையில் கொண்டுவரப்பட வேண்டும்.

அரசியல் கட்சிகளுக்கு வரும் நிதி தொடர்பில் வெளிப்படைதன்மை இல்லாததால் அந்த நிதியை வைத்து நாட்டைக் குழப்புவதற்குரிய செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக உள்ளது."-எனவும் கோடீஸ்வரன் எம்.பி. குறிப்பிட்டார். (அ)

# சபாநாயகரை சந்தித்தார் நேபாள நாட்டுத் தூதுவர்



கொழும்பு, ஜூன் 06

இலங்கைக்கான நேபாள தூதுவர் புர்ணா பஹதூர், மரியாதை நிமித்தமாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நேபாளாத் தூதுக் குழுவினரை வரவேற்பதற்குத் தயாராக இருப்பதாக சபாநாயகர் இச்சந்திப்பில் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையில் காணப்படும் நீண்ட கால பரஸ்பர உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்களை இரு தரப்பினரும் நினைவுகூர்ந்ததுடன், இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தனர்.

இரு நாடுகளுக்கும் பொதுவாக இருக்கும் விவசாயத் துறையில் ஒத்துழைப்புடன் செயற்படுவதன் முக்கியத்துவத்தை சபாநாயகர் வலியுறுத்தியதுடன், உணவுத் தயாரிப்பு, உணவுப் பாதுகாப்பு போன்ற விடயங்களில் பரஸ்பர அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர கல்விசார் ஒத்துழைப்புக்கள் குறித்தும் இச்சந்திப்பில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

அத்துடன், தெற்கு-தெற்கு ஒத்துழைப்பை மேம்படுத்தும் நேபாளத்தின் உறுதிப்பாட்டையும் அந்நாட்டுத் தூதுவர் சுட்டிக்காட்டினார். (அ)

# அரச நியமனம் வழங்காது பணியில் அமர்த்தப்பட்ட சுகாதார தொண்டர்களுக்கு சம்பளம் வழங்கப்படுமா?

## அர்ச்சுனா எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, ஜூன் 06

யாழ். போதனா வைத்தியசாலையில் அரச நியமனம் வழங்காது 3 வருட காலத்துக்கு சுகாதார தொண்டர்களாக அமர்த்தப்பட்டவர்களுக்கான சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா? என்று பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் யாழ்ப்பாணம் அல்ல பேராதனை வைத்தியசாலையில் நான் 3 வருடங்கள் வேலை செய்தேன். அரசாங்கம் ஒரு நியமனத்தைக் கொடுக்காமல் எந்தவொரு வைத்தியசாலையிலும் வேலை செய்ய முடியாது. இவர்களின் தொழிலின் அடிப்படையில் இவர்கள் 3 வருடங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிக்கின்றார்கள்.

அமர்த்தப்பட்ட வேலைக்குரிய காலத்தின் புத்தகங்கள் எரிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய பதிவுகள் இல்லாமல் அழிக்கப்பட்டுள்ளன. தனித்தனியாக அவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். தங்களால் அவர்களுடைய அந்த 3 வருட காலத்துக்குரிய அதாவது மொத்தமாக 36 மாத கால அந்த வேலைக்குரிய பணத்தை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியுமா? பெற்றுக்கொடுக்க முடியுமா?-எனக் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி,உண்மையில் நான் தெனிவுபத்தியிருந்தேன். அவர்கள் தன்னார்வ முறையில் தான் பணியாற்றியிருக்கின்றார்கள் என்று ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல. வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய வைத்தியசாலைகளிலும் கூட இந்தப்பிரச்னை இருக்கின்றது. ஆனால் இவ்வளவு எண்ணிக்கையான தன்னார்வ ஊழியர்கள் வேறு எந்தவொரு வைத்தியசாலைகளிலும் சேர்க்கப்படவில்லை. இது தான் பிரச்னை. சம்பளம் வழங்கியிருப்பது இங்குடைய எல்லைக்கு அப்பால். ஏதாவது அஞ்ஜியோ சம்பளம் வழங்கியதோ தெரியவில்லை. எவ்வாறென்றாலும் எதிர்காலத்தில் நாங்கள் வேலைவாய்ப்புக்களை வழங்குகின்ற போது அவர்களுக்கு முன்னுரிமையை வழங்குவோம். ஆனாலும் அவர்களுக்கான கடந்த காலத்துக்கான சம்பளத்தை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை.- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.